# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## புதுச்சேரியில் இன்று தொடங்குகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 6-ஆம் தேதி புதுச்சேரியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்றாம் கட்டமாக புதுச்சேரியில் பரப்புரையை தொடங்குகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **06.04.2026 (திங்கட்கிழமை)** | | |
| மாலை 5 மணி | புதுச்சேரி (பொதுக்கூட்டம்) | புதுச்சேரி மாநிலம் |
| **07.04.2026 (செவ்வாய்க் கிழமை)** | | |
| மாலை 4 மணி | சீர்காழி (பொதுக்கூட்டம்) | மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார், நாகப்பட்டினம், கீழ்வேளூர், வேதாரண்யம் |
| மாலை 7 மணி | கடலூர் (பொதுக்கூட்டம்) | திட்டக்குடி, விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர், நெய்வேலி, புவனகிரி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் |
| **08.04.2026 (புதன் கிழமை)** | | |
| மாலை 4 மணி | திருவண்ணாமலை (பொதுக்கூட்டம்) | உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி |
| மாலை 7 மணி | விழுப்புரம் (பொதுக்கூட்டம்) | திண்டிவனம், வானூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், செஞ்சி, மயிலம் |
| **09.04.2026 (வியாழக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | கரிசங்கால் - படப்பை (பொதுக்கூட்டம்) | செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம், மதுரவாயல், அம்பத்தூர், ஆலந்தூர், திருபெரும்புதூர், காஞ்சிபுரம் |

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 05.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.4.2025) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தை நிறைவு செய்து மதுரை விமான நிலையம் செல்லும் வழியில், பெருந்திரளான பொதுமக்கள் மற்றும் பெண்கள் திமுக தேர்தல் அறிக்கையில் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக நன்றி தெரிவித்து, கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.